610
. 2445.

உ
சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR
6 - NOV 1930

வீரசைவம்.

திங்கள் வெளியீடு

மலர் உ | பிரமோதூத—ஐப்பசி 1930—அக்டோபர் | இதழ் ய

க. கடவுள் வணக்கம்
உ. ஸ்ரீபசவேசர் விஜயம்
ரு. பாவலர் விருந்து
ச. வீரசைவ மதமும், வைஷ்ணவ மதமும்
ரு. தீக்ஷையே மோக்ஷ சாதனம்
சு. திருமுருகாற்றுப்படை
எ. சிவானுபவம்
அ. ஹரிஹரம் யாகம்
கூ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர்,
வீரசைவ நிலையம்,
முசிரி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி, துறையூர்—1930.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

சென்னை வீரசைவ சங்கம்.

சென்னை வீரசைவ சங்கத்தின் காரிய நிர்வாகிகளுடைய கூட்டமொன்று திருவாளர் S. C. நாகப்ப செட்டியார் அவர்கள் தலைமையின்கண் பார்க் டவுன் அனுமந்தராயன் தெரு 46 கெ. குருபசவ அண்டு கம்பெனியின் கட்டடத்தின்கண் (12—10—1930) ஞாயிறன்று 2½-மணிக்குக் கூடிற்று. அங்கு வீரசைவ மாணவர்களும் வீரசைவப் பிரபுக்களும் வந்திருந்தார்கள். காரியதரிசியினுல் சென்றவாண்டின் மாணவர் விடுதியின் அறிக்கை படிக்கப்பெற்றது. வீரசைவ மாணவர் விடுதியின் வளர்ச்சியைக் கருதிப் பலவிஷயங்கள் பேசப்பெற்றன.

சென்னை வீரசைவ வித்தியார்த்தி மந்திரம் (மாணவர் விடுதி) ஷை சங்கத்தாரால் நிறுவப்பெற்று ஓராண்டாகின்றது. இதனுல் வீரசைவ மாணவர்கட்கு மாத்திரம் அல்லாமல் யாத்திரையாக வரும் வீரசைவ சமாஜத்தவர்கட்கும் அனுகூலமா யிருக்கிறது. சென்ற ஆண்டில் இந்த விடுதியில் 19 மாணவர்கள் இருந்தார்கள். அவர்களுள், மூவர் (3) B. L. பரீக்ஷையிலும், மூவர் (3) F. L. வகுப்பிலும், எழுவர் (7) சீனியர் இண்டர் மீடியேட் வகுப்பிலும், ஒருவர் (1) மெடிகல் காலேஜிலும், ஒருவர் (1) ஜூனியர் இண்டர் மீடியேட் வகுப்பிலும், இருவர் (2) டெக்னிகல் இன்ஸ்டிடியூடிலும் பயின்று வந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் இந்த ஆண்டில் தேறியிருக்கின்றார்கள். மாணவர் பல காலேஜிலும் பயில்கின்றார்கள். திவான் பகதூர் ராஜ சபாபூஷண: சர். கே. பி. புட்டண்ண செட்டியார், கெ. டி. ஸி. ஐ. அவர்கள் முதலிய பெரியார்வந்து நல்ல அபிப்பிராயங் கொடுத்துள்ளார்கள். பலருடைய உபகாரம் இவ்வுத்தம தருமத்திற்கு வேண்டற்பாலது என்று வேண்டுகிறோம்.

இப்படிக்கு,

S. C. நாகய்ய செட்டியார்,

தலைவர்.

உ

சிவமயம்.

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

6 NOV 1930

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர்	பிரமோதூத — ஐப்பசி.	இதழ்
உ.	1930 — அக்டோபர்.	௰.

(கடவுள் வணக்கம்.)

1 *பஞ்சாநந தநுத்பூதாங் பஞ்சாக்ஷர மநூபமாங்*
பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாங் ஜகத்குரூங்.

2 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன்.

3 வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாந்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாதும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4 பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருளைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5 மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஸ்ரீபசவேசர் விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B. A., L. L. B., வக்கீல், பெங்களூர்.

சன்னபசவதேவர் புலைத் தன்மைக்கும் பிராமணத் தன்மைக்கும் உள்ள உண்மைத் தன்மைகளை அரசர்க்கு எடுத்துக் கூறினர். அறிவுடைய எந்த மக்களும் அவர் காட்டிய உண்மை மொழிகளை ஏற்றுக் கொள்ளாது மறுக்கார். அரசற்கோ அவரது உபதேசம் அனைத்தும் கற்பாறையிலறைந்த மாமுளை போலாயின! சாந்தமும் சமத்காரமுமுடைய சன்னபசவ தேவருடைய சாந்தமொழிகளே பயன்படாது போயினவென்றால், மதுவரசருடைய வீரமொழிகளா அரசனுடைய செவித் துளையிற் புகுந்து அமைதியை யுண்டாக்கப் போகின்றது? மதுவரசன் என்னும் அந்தணர் பெருமான் அரளையர் போன்ற அன்புடையார் புலையராகார்; உன்பாலுள்ள பொறாமையும் சுயநலமுமுடைய கள்வரே புலையராவர் என்று அஞ்சாது எடுத்துக் கூறினர். கூறவே அரசர்க்குப் பெருங்கோபம் உண்டாகத் தன்பாலுள்ள சேவகர்களை விழித்து, 'இந்த மதுவையன் அரளையன் என்னும் இரண்டு கொடியவர்களையும் எருதுகளுக்குப் பதிலாகப் பாரவண்டியிற் கட்டி இழுக்கும்படிச் செய்யுங்களென்று விச்சலமன்னன் உத்தரவளித்தான்.

இங்ஙனம் உத்தரவளிக்கக் கேட்ட மகாபக்தராகிய அரளையர் என்னும் அருளுடைப் பெரியார் மன்னனை நோக்கி, கொடுங்கோல் மன்ன! இதுவோ கொற்றம்? இதுவோ நீதி? இதுவோ ஆண்மை? இதுவோ பெருந்தகைமை? புன்மதியுடைய நினது பரிசனங்களாகிய பகைவரது வஞ்சக மொழியைக் கேட்டு ஒருபாற் கோடிய நீயோ அரசன்? நினது நாடும் ஆளுகையும் இன்றே பாழ்படுக! நினது நாட்டகத்தேயுள்ள அருந்தவரும் அந்தணரும் அயல்நாடு செல்க! அருளும் அன்பும் நினது ஆட்சிக் கஞ்சி அரசராவாரிடம் புகுக! என்று சாபங் கொடுத்தனர்.

நற்காலம் உடையார்க் கல்லவா நல்லறிவு தோன்றும். அஃதில்லாதவர்க்கு அது எங்ஙனந் தோன்றும்? குணமென்னுங் குன்றேறி நின்றாராகிய அரளையரது வெகுளியைக் காக்கும் அடக்கம்

உடைமை அந்தோ அங்குள்ளார் ஒருவர் இடத்தும் உண்டாகாமற் போயிற்று! அழிவுபட் டொழிவார் யாரும் அரசற்கே கோபத்தை மூட்டினர். விச்சல மன்னனே மீளவும் பெருங் கோபங்கொண்டு கொடுஞ் செயலாளரை நோக்கி 'இவ்வரளையனைக் கொண்டுபோய்க் கொலைக் களத்தே நிறுத்தி இரண்டு கண்களையும் பிடுங்கி வைத்துக் கூரியதோர் சூலத்தின்மேல் ஏறச்செய்க என்று கடுந்தண்டனை விதித்தான். கதிரவனே கடுந்தண்டனையைக் காணச் சகியாதவனாய்க் கடலின்கண் ஒளித்தான். அரசன்பால் உள்ள துன்மதி அமைச்சரது உள்ளம்போல் உலகெங்கும் இருள்மூடிற்று. அங்குள்ள சில நன்மதியுடையாரது தூய்மையான உள்ளம்போல் ஆங்காங்குச் சில விளக்கொளிகள் பேரிருளிடையே சிறிது சிறிது தோன்றுவதும் மறைவதுமாய் இருந்தன. கொடுங்கோன் மன்னரது நாட்டை விட்டகன்று சேய்மைக்கண் நின்று ஆவதை நோக்கும் அறிவுடையார்போல ஆகாயத்திடத்தே நக்ஷத்திரங்கள் விளங்கின. கருதியதை முடிக்கக் காலம் கருதிச் சிறைவாய்ப்பட்டு நிற்கும் சீரியோரைப் போலச் சந்திரமண்டலமோ மேகத்தால் மறைப்புண்டு வேற்று நாட்டகத்தே விளங்கிக் கொண்டிருந்தன. நகரெங்கும் அமைதியின்மையே பெருகிற்று. சில நடுநிலையுடையார் அரசற்கும் குடிகட்கும் நன்மையை யுண்டாக்கும் எதிர்கால விளைவைச் சிந்தித்துக்கொண் டிருந்தனர். இச்செயல் இங்ஙனம் நிகழாநிற்க,

மகோபதேசமாகிய இதோபதேசம்புரிந்து யாவரையும் நல்வழிப் படுத்தி நாட்டைச் சீர்திருத்த வேண்டுமென்ற நோக்கங்கொண்டு வெளியூர்களுக்குச் சென்றிருந்த பசவேசரோ இங்கு நடந்த நிகழ்ச்சியை அறியார். ஓர் கொடியசெய்கை எத்துணை நேரந்தான் பரவாமலிருக்கும்? எவரும் அவர்பால் உரைக்க அஞ்சி நாவெழாது நின்றாராயினும் அறக்கடவுள் பறையறைந்து ஆங்கோதிப் பரக்கும்படிச் செய்யுமல்லவா? எவ்வாறோ சிறிதுநேரத்தில் இவ்வநீதியான மொழி அவரது காதிற்கு எட்டியது. அப்பொழுதிருந்த நமது வள்ளலாரது மனப்பான்மையை யாவரே அறிவார்? அவரது உள்ளமே யறியும்; அல்லது அவர் உள்ளத்தி னுள்ளே ஒளிவடிவாய் நின்று விளங்கும் இறைவனே யறிவன். சிறிதுநேரஞ் செய்வதொன் றறியாது திகைத்தனர். எங்கும் மருண்டுநோக்கினர். மரம்போல் அசைவற்றுநின்றனர்.

உணர்ச்சிவர உலகத்தையே முற்றிலும் வெறுத்தனர். இனி இந் நாட்டிலிருப்பது தகுதியன்றெனத் துணிந்தனர். தமது ஞானசாரி யாராகிய ஜாதவேத முனிவர் எழுந்தருளியிருக்கும் கூடல சங்கமேசத் திற்குப்போக நிச்சயித்தனர். அவரது உள்ளக் குறிப்பை அங்குள்ள சில அறிவுடையார் அறிந்தனர். பலர்க்கும் வெளிப்படையாகத் தமது கருத்தை அறிவித்து விடைகேட்டனர். பேயோடாயினும் பிரிவதரிதெனின் உள்ளம் பழுத்த கருணைக் கடலாகிய நமது வள்ள லாருடன் பழகிய யாவராயினும் பிரிந்திருக்க ஒருப்படுவரா? அவ ரது உபதேச மொழியைக் கேட்டவருடைய செவிகள் வேறொன்றைக் கேட்க விரும்புமா? அவரது தூய்மையான உருவத் தோற்றத்தைக் கண்டு இன்புற்ற கண்கள் வேறொன்றை நாடுமா? கதிரவனும் நமது கருணைக் கடலைக்காண வருவான்போலக் கடலகத்தே தோன்றினன். கங்குல் முழுவதும் கவலையில் உறங்காது விழித்திருந்த அன்பர்க ளுடைய கண்களோடு ஒத்துழைப்பக் கமலமும் மலர்ந்தன. அடாத செயலைக்கண் டஞ்சுவார் விழிபோல் ஆம்பலும் குவிந்தன. நாட்டி லுள்ளார் பலரும் வந்து நம் பசவேசரைக் கூடினர். கூடினர் யாரும் அவர் மயமாயினர். அவரது பிரிவிற்குப் பெரிதும் வருந்தினர். தங் களை விட்டுப் போகலாகாதெனப் பலரும் வேண்டினர். அவரது வாக்கிற்கு யாரும் எதிர்நோக்கி நின்றனர். எதிர்பார்த்திருந்த அன் பர்களது உள்ளக்குறிப்பை முகக்குறிப்பா லறிந்தனர். அன்பின் வலைப்பட்டார் எக்காலத்தில்தான் தம் கடமையைச் செய்யாது விடு வர்? நம் பசவேசர் தம்மை வந்து சூழ்ந்துநின்ற பெருங் கூட்டத் தினர்க்கும் பின்வருமாறு உபதேசிக்கத் தொடங்கினர்.

முடிவுரை உபதேசம்.

பேரன்புடையவர்களே! சகோதரர்களே! சகோதரிகளே! யான் உங்களை விட்டுப்பிரிந்து எனது ஞானசாரியருடைய பாதங்களை யடைய வேண்டுமெனக் கருதி உங்களிடம் விடை பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கருதியிருக்கின்ற இந்த நிலையில் நீங்களே என்னிடம் வந்துகூடிச் சூழ்ந்துநிற்கும் உங்கள் பேரன்பைக் காணப் பெரிதும் மகிழ்கின்றேன். இன்னும் யான் உங்களைவிட்டுப் பிரிந்து போகாமல் உங்கள் கூட்டத்தினிடையே எப்பொழுதும் இருக்க வேண்டுமென விரும்பும் விருப்பத்திற்குப் பெரிதும் களிப்புறுகின்றேன். மீண்டும்

என் வாயால் சில மொழிகளைக் கேட்க வேண்டுமென அவாவும் உங்கள் அவாவிற்குப் பெரிதும் நன்றியறிதல் உடையவனாய் இருக்கின்றேன். உங்களன்பை என்றும் மறவேன். உங்கள் நன்மையைக் கோரியே என்றும் இஷ்டலிங்கப் பெருமானைப் பூசிப்பேன். உங்களை விட்டுப் பிரிந்துநிற்க எனது மனமும் ஒருப்படவில்லை. ஆயினும் காலநிலைக்கேற்ப நடந்துகொள்ள வேண்டுவதன்றோ என்னைப் போன்றாரது கடமையும், உங்களைப் போன்றாரது உரிமையுமாகும். காலத்துடன் எதிர்த்து நிற்பான் எவனும் அறிவுடையனாகான். ஆதலால் எனது பிரிவிற் குடன்பட்டு விடை கொடுக்காது மறுப்பீர்களென யான் உங்களிடம் ஐயங்கொள்ளவில்லை. நிற்க,

தேசபக்தர்களே!

மதுவையர், அரளையர் இருவர்க்கும் கெடுதி யுண்டாய்விட்டது என்றாவது அவரது கொள்கைக்கு அழிவு நேர்ந்தது என்றாவது நீங்கள் கருதலாகாது. உலகத்தில் தோன்றியன வெல்லாம் அழியாமலிரா, அழிந்தன வெல்லாம் மீண்டுந் தோன்றாமலிரா. பெருகினவை யெல்லாம் குறையாமலிரா. தோற்றக் கேடுகள் உருவங்கட்கே யன்றி உயிர்க்காகா. தோற்றக் கேடுகள் உயிர்க்கில்லாத போது உயிர்க் குணமாகிய எண்ணங்கட்கும் எப்பொழுதும் அழிவில்லை யென்பது நிச்சயம். உலகத்தில் செடி, கொடி முதலிய தாவரப் பொருள்களுள் ஒன்றழிந்தால் அதன் இனத்திற்கே கேடு வந்ததாகக் கருதற்கு இடமில்லை. ஒன்றினுடைய அழிவே அதனினமாகிய மற்றொன்றின் ஆக்கத்திற்கு அதாவது வளர்ச்சிக்கு உருவாகின்றது. அதுபோலவே ஓர் சிறந்த கொள்கையை யுடைய தேசபக்தர் தம் கொள்கையை நாட்டநின்று சாந்தமான போரில் உயிர்விடுவரேல் அவரழிந்தா ரென்றாவது அவரது கொள்கை யழிந்ததென்றாவது அறிவுடையார் கருதார். அவரது சக்தி தம் கொள்கையை நிலைநாட்டப் புதியதும் உறுதியானதுமான பலவுடலை எடுத்துவர வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பழங்குடிலை விட்டுப் பிரிந்ததாகவே கருதல் வேண்டும். அந்தச் சக்தி இன்னும் விரைவில் பல அரளையர் மதுவையர் வடிவமெடுத்தே வருமென்று நம்புங்கள். உலக நன்மைக்காக உயிர் கொடுத்தோரே வீரர். அவரே தீரர். அவரே இவ்வுலகிற்கோர் அச்சாணி. இதில் சிறிதும் ஐயுறல் வேண்டா.

ஆதலால் நீங்கள் கொண்டுள்ள நற்கொள்கைகளை எவ்வித இடையூற்றிற்கும் தளர்ந்து விட்டுவிடாதீர்கள்.

மெய்யன்பர்களே!

யான் இந்த அமைச்சர் பதவியை ஒப்புக்கொண்டது பணஞ் சம்பாதித்துப் புகழ் பெற்று ஆனந்த லீலையில் எனது வாழ் நாளைக் கழிக்க வேண்டுமென்பது அல்லவே. நீர்க் குமிழியைப் போன்றவுடலை நிலையென நம்பி அதனைக் காத்தற்கு உடலாகிய நீர்க்குமிழிக்கு இருப்புப்பூண் கட்ட வந்தவனல்லவே. பரமாத்மாவிற்கும் உண்மைக்கும் அஞ்சி ஊழியஞ் செய்பவனேயன்றி ஒருவரைக் கண்டு அஞ்சியாவது திருப்தி செய்விக்கவாவது வேலை செய்பவனல்லவே. யான் அப்பதவியை ஒப்புக்கொண்டபோது செய்த உறுதிமொழிகளை நீங்கள் அறியாதவர்களல்லவே. எனது வாழ்க்கையின் முக்கிய நோக்கம் தேசத்தில் உள்ளவர்களுடைய நன்மையை நாடித் தக்க ஊழியஞ் செய்யவேண்டும் என்பதே யன்றிப் பிறிதொன்றை நாடியதன்று. இப்பொழுதிருக்கும் காலநிலைமையைக் கருதிப்பார்த்தால் என் பதவியில் இருந்தே எனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாதுபோல் இருக்கின்றது. அதனைவிடுத்து விலகி நிற்பதே நலமென்று தோன்றுகின்றது. நமது அரசரோ நடுநிலைமையினின்று உண்மையை ஆராயாது கோளுரைப்போர் கூற்றைக்கேட்டு நடப்பவரா யிருக்கின்றனர். பலருடைய சாதிமதக் கொள்கையில் ஈடுபடாது நடுநிலைமையிலிருந்து ஆளுவதே உத்தம அரசியல். குடிகள் காலங்கருதிச் சீர்திருத்தக் கொள்கையில் தலைப்படுவர். அது தவறென்றுவது சரியென்றுவது ஒரு சிலரால் சொல்ல முடியாது. இதற்கு மாறான நிலையில் இருக்குங்கால் யான் விலகிநிற்பதே தகுதியென எனக்குத் தோன்றுகின்றது.

யான் உங்கள் குழுவைவிட்டு நீங்குவேனுயினும் யான் சொன்ன நீதிகளையும், செய்த வேலைகளையும் மறவாது நிலையில்வைத்து நடப்பீர்களாயின் அதுவே என்பால் புரிந்த நன்றியாகும். நீங்கள் உயர்ந்த நிலையை அடைதற்குச் சாதகமாகும். அதுவே எழுபிறப்பும் நம்மிருவரிடத்தும் விடாது நிற்கும் அன்பின் தொடர்பை நிலைபெறச் செய்வதாகும்.

ஒவ்வொருவரும் நாம் யார்? நாம் செய்யவேண்டிய வேலை யாது? நாம் எதற்காக இவ்வுடலை எடுத்தோம்? உடல் பொருளாதிய போகப் பொருள்களை நாமே பெற்றோமா? நமக்கோர் முழுமுதற் றலைவன் தந்தானா? அவன் தந்தனவாயின் அவன் தந்ததன் நோக்கம் யாதாக இருக்கலாம்? தந்தவன் நோக்கத்தைக் கூர்ந்து நோக்கி அவற்றைத் தக்க வழியில் பயன்பெறச் செய்கின்றோமா? அல்லது பயனற்ற வழியிற் செலவழித்து அவனுடைய கருத்திற்கு மாறுபட்டு நடக்கின்றோமா? அங்ஙனம் நடப்போமாயின் நமக்கு வருவது நன்மையா தீமையா? என்றெல்லாம் ஒவ்வொரு கணப்பொழுதாவது சிந்தித்துத் தெளிதல் வேண்டும். தெளிந்தபடி நடக்கவேண்டும்.

உலகத்திற்கு முழுமுதற் கடவுள் ஒருவரே உண்டென்றும், அக் கடவுளாலேயே சித்தும் அசித்துமாகிய உலகம் படைத்துக் காத்து அழிக்கப்படுகின்ற தென்றும், சித்துப் பொருளாகிய ஆன்மாக்கள் படைப்பு முதலிய முத்தொழில் வயப்பட்டு வருவதெல்லாம் களிம்புநீங்க மாற்றுயர்வதற்குக் காய்ச்சப்படும் பொன்போல ஆணவ மலக் களிம்புவிட்டுச் சுத்தாத்மத் தன்மையை அடைதற் பொருட்டேயென்றும், இறைவனது லீலை ஒவ்வொன்றும் வீணாகாது சீவர்களின் நன்மையின் பொருட்டே செய்யப்படுவன வென்றும், மனிதராகப் பிறந்தார் ஒவ்வொருவரும் சுருதி யுக்தி அனுபவங்களாலும் ஆசாரியர் முகத்தாலும் நன்கறிந்துணர்தல் வேண்டும். அங்ஙனம் அறிந்துணர்பவரே மக்களெனச் சுட்டப் படுவார். ஏனையோர் மாக்களெனக் கருதப்படுவார்.

நாம் அனைவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள் என்றேற் படுவதால் அக்கடவுட்குப் புதல்வர்க ளாகின்றோம்; ஆகவே, நாம் அனைவோரும் சகோதர ராகின்றோம்; சகோதரராகவே நாமெல்லோரும் ஒருவர்க் கொருவர் அன்புடையாராய் ஒரு குடும்பத்திற் பிறந்தார் போல் சகோதர பாவனை யுடையவராய் ஒற்றுமையுடன் வாழவேண்டும். நம் பிதாவாகிய கடவுள் தமது புதல்வராகிய யாவரிடத்தும் ஒரேவிதமான கருணை யுடையவராய் இருப்பரே யன்றிப் பாரபக்ஷம் உடையவராயிரார். அப்படியானால், சிலர் நல்வாழ்வு பெற்றுச் சுக

முடையாராகவும், சிலர் வாழ்க்கையிழந்து துன்பம் உடையராகவும், சிலர் அறிவுடையராகவும், சிலர் அறிவில்லாதவராகவும் இருத்தற்குக் காரணம் யாதோவென்று கேட்பீர்களாயின் அஃது கேட்கத்தக்கதே. ஒரே தந்தைக்கு நான்கு புதல்வர்கள் பிறக்கின்றார்கள். அவருள் ஒருவன் கல்வியில் ஊக்கமுடையவனாகின்றான். மற்றவன் கைத்தொழிலில் முயற்சியுடையவனாகக் காணப்படுகின்றான். வேறொருவன் சிற்பத்தில் விருப்பமுடையவனாகத் தோன்றுகின்றான். மற்றவன் வேளாண்மையே சிறந்த தொழிலென அதில் ஊக்கங் காட்டுகின்றான். ஆனால் அவருடைய தந்தையோ ஆரம்பத்தில் நால்வரையும் ஒரு திட்டமான ஆரம்ப பாடசாலையிலேயே பயிலச் செய்கின்றார். ஒரே விதமான உணவு உடைகளைக் கொடுத்துப் பாதுகாக்கின்றார். அப்புதல்வர்களோ ஆரம்பக் கல்விப் பயிற்சியானவுடன் தத்தமக்கு விருப்பமான துறையிற் செல்ல விருப்பங் கொள்கின்றனர். அறிவுடைய தந்தையாயின் அந்நால்வரையும் ஒரே துறையிற் புகும்படிக் கட்டாயப்படுத்தார். அவரவர் வேண்டிய துறையிலேயே புகவிடுவார். அவரவரும் தாம் தாம் விரும்பிய துறையிற் புகுந்து நன்மையுடையவராய் இன்புறுகின்றவரும், நன்மை யில்லாதவராய்த் துன்புறுகின்றவரும் ஆகின்றனர். நால்வருடைய இன்ப துன்பங்களில் தந்தையோ ஒன்றை விரும்பினவருமல்லர் வெறுத்தவருமல்லர். நால்வரும் இன்ப நுகர வேண்டு மென்பதுதான் அவரது நோக்கம். ஏற்றத் தாழ்வடைவது அவரவரது வினையின் பயன். அவ்வாறே கடவுளும் பாரபக்ஷமுடையவரல்லர். வேண்டுவார்க்கு வேண்டுவதே கொடுப்பவனாகிய கருணையங்கடல். நாமனைவோரும் மனமகிழ்ச்சியுடன் நல்வழியில் நடக்க வேண்டும் என்பதுதான் அவ்விறைவனுடைய கருத்து. அங்ஙனம் இருப்ப நாமேன் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடையராய்ப் பரஸ்பரம் உதவி புரிபவராய் இருத்தல் கூடாது? நாம் ஒற்றுமையுடையராய், சகோதரபாவ முடையராய், உதவி புரிபவராய், யாவரும் இன்ப வாழ்வையடைந்து நல்வழியில் நடப்பக் காண்பதே இன்பநிலையென வுணர்ந்து வாழ்வோமாயின் அப்பொழுதே நமது தந்தையாகிய கடவுள் மகிழ்ச்சியுறுவர் என்பதை ஒவ்வொரு கணமும் சிந்தித்தல் வேண்டும். அங்ஙனஞ் சிந்தித்து நடப்போமாயின் கடவுள் கருணைபுரிவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. (தொடரும்)

பாவலர் விருந்து.

திருவாளர், அ. வரதநஞ்சய பிள்ளையவர்கள், தோரமங்கலம்.

(முன் தொடர்ச்சி,)

மற்றைக் கவிஞர்கள் தமது கற்பனைசக்தியை உவமை வாயிலாக வெளியிடுவது, உலக இயற்கைப் பொருட்கள், பண்புகள், செய்கைகள் முதலியன கொண்டு. நமது பாவலரோ இலக்கண நூல் விதிகளைக்கூட உவமங்கொண்டு நயமிகக் கூறி நம் மனத்தை உவப்புறச் செய்வர். "பசவண்ணரைக் கண்ணுறும் அறிஞர்கள் அவரை, ஒரு மனிதராக விருப்பினும், சிவபிரானுகந்த திருநந்தி தேவரின் அவதாரமாகவே கருதுவார்கள்" என்பதற்கு இலக்கண நூலிற் புணர்ச்சிவிதி ஒன்றை உவமம் ஆக்குகின்றார். பாருங்கள் இவரது அரிய சீரிய ஆழ்ந்த புலமையை,

குறில்வழி லகரந் தனிநிலையாயுங் கூடிய தகரமுன் னெழுத்தேன்
றறிகுறி வடிவந் திரிதல்போ னந்தி யடல்விடை மெய்திரிந் துறினும்
நறுமலர் விழியாற் கண்டவ ரெல்லா நந்தியே யென்றுள மகிழ்வார்.

ஒரு தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் லகார ளகாரங்களுள் ஒன்று நிலைமொழி யீறாக நிற்ப, வருமொழி முதலில் தகர எழுத்துடைய சொல்புணர்ந்து அல்வழியாக முடியுமாயின், அந்நிலைமொழி யீற்றினின்ற லகார ளகாரங்கள் ஓர் ஆய்த எழுத்தாக மாறும். வருமொழி முதலில்நின்ற தகரம் லகர ளகரங்களோடு புணர்வழி யடையுந் திரிபுப்படியே றகர டகரங்களாக மாறும் என்பது இலக்கணம். இதனை

"குறில்வழி ல ளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே."

எனப் போதரும் நன்னூற் சூத்திரத்தால் அறிக.

இங்கு ஆசிரியர் இப்புணர்ச்சியை நன்குகருதி அமைக்கின்றார்:— ஒரு மெய் வேறொரு மெய்யாக மாறுதல்தான் இயல்பு. மகாரமும் ககாரமும் புணரின் ஙகாரமும், மகர சகரம் புணரின் ஞகாரமும் ஆதல்

போல. இங்ஙனமன்றி முதலெழுத்துக்களில் ஒன்றாகிய லகரமெய், சார்பு எழுத்தாகிய ஆய்த வெழுத்தாக வியப்புறும்படி மாறியது நோக்குவார், இஃது இயற்கையாகிய ஆய்தமோ? புணர்ச்சி வகையால் வந்ததோ? என நுட்பமாக ஆய்ந்து லகரமன்றே இவ்வாறாயிற்று. ஆயினும் இது பகுக்கப்படும்போது தன் மெய் காட்டுமே யன்றி இப் போது தோன்றும் ஆய்த உருவைக் காட்டாது என நிச்சயிப்பர். அஃதொப்பவே கடவுட் டன்மையுடைய நந்திபிரான் தமது தகை மைக்கு ஒவ்வாத ஒரு மக்கட் பிறவியில் அவதரித்தார் என்றாலும், ஊன்றி ஆராயுங்கால் அவர் நந்தியே தவிர வேறு மனிதருள் (பாச சீவர்களுள்) ஒருவரல்லர் என்பது தெற்றென்னும். அல்வழிச்சந்தியில் தகர முன்னுடைய வருமொழி புணர்க்கப்படுங் காரணத்தால் மயக் காதியின்றி லகரம் ஆய்தமாக மாறினாற் போலவே சிவபெருமானது ஆணைதாங்கி நிலவுலகின் மக்கட்குப் புறச்சமயப் புன்மை போக்கி மெய்ச் சைவசமய மேன்மை தெரித்தற் பொருட்டே அவர் தமக்கு இயல்பல்லாத மானிட உருவத்தோடு பிறந்தார் என்று கொள்க. என அகலவுரை கூறுமாறு இவ்வருஞ் செய்யுள் பொலிந்து நிற்பதறிக. எத்தனையோ காவியங்களைப் படித்துச் சுவைத்துய்க்கும் அறிஞர்கள் நமது பாவலனார் கவிகளைப் படிக்கும்போது தனிப்பட்ட சுவையை — புதிய சுவையை — வியப்பான சுவையை — அனுபவிப்பதாகவே எண் ணுவார்கள். ஒரே செய்யுளில் தடாகம், வயல்கள், சோலைகள், நகர மாடங்கள் என்னும் நான்கையும் வருணிப்பார். அவ்வருணிப்பும் முதலில் எடுத்துக்கொண்ட பொருட்கு இனம் இனமாக அமைப்பார். அவ்வமைப்பும் இற்றென வெளியிடாது கற்போர் கருத்து வகையால் கருதியறியப் புகல்வார். புகன்று நம்முள்ளத்தைப் பரவசமுறுவிப் பார். என்னே! நம் அடிகளின் சொற்றிறம்! என்னே! அவர் தம் மதிநுட்பம்!

வாவி யாவு மதன்பெருந் தூணிசெய்
யாவு மார ணெடுக்குஞ் சிலையிடம்
காவெ லாமவன் காகளச் சாலைகள்
பூவை மார்மனை போர்க்கள மேன்பவே.

கண்டீர்களா! அறிஞர்காள்! தடாகங்களெல்லாம் மன்மதனது அம்புகள் பொதிந்து வைக்கப்படும் தூணிகளாம் என்றால் அவனது

ஐங்கணைகளுள் தாமரை, நீலம் என்னும் (முதற்கணையும் கடைசிக் கணையும்) இருவகை மலர்களால் நிறைந்திருக்கின்றன என்று கருத்து. விளைநிலங்களெல்லாம் அவனது விற்கள் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும் சாலைகளாம் என்றால் கரும்பே விளையுங் கழனிகள் என்றவாறு. சோலைகள் முழுதும் அவனது எக்காளம் (ஊதுகொம்பு) நிறைந்த கூடங்களாம் என்றால் குயில்களுக்கு இருப்பிடமாவன வென்றபடி மங்கையர் வசிக்கும் மாளிகைகள் யாவும் அவன் போர்புரியுங் களங்களாம் என்றால் அழகிய இளம்பருவ மாதரும் ஆடவரும் எல்லா மனைகளிலும் காதலுடன் கூடி வாழ்கின்றார்கள் என்று கருத்து.

இவ்வளவு சுருங்கிய அடிகளில் நான்கு வர்ணனைகள் நாற்பொருட்கும் கூறி அவை முற்றும் காமனது தூணி, வில், காகளம் இவை சார்த்தப்படுங் கூடங்களாகவும் போர்க்களமாகவும் உள்ளன வென ஒருபொருட் டொடர்புகாட்டிக் குறித்த பொருளைக் குறிப்பா லுணர்த்திக் கெம்பீரமாகச் செல்லும் உயர்தரக்கருத்தை யாம் சிந்தாமணி, கம்பன்கவி, மணிமேகலை, சிலப்பதிகாரம், ஏனைச்சங்க இலக்கியங்கள் எவற்றினும் ஒருங்கு கண்டதில்லை. ஆகவே இவர் கற்பனை நயப்பாடு காட்டவந்த அவதார புருஷரே என்போம்.

ஓரிடத்தில் ஸ்ரீசைலத்தை வர்ணிக்கின்றார் :— குறிஞ்சி நிலக் கருப்பொருளாகிய யானைகளைப்பற்றி அங்குக் கூறவேண்டும். மலையில் அருவியும் ஒழுகிக்கொண்டு இருக்குமன்றோ? யானைகள் நீருண்ணும்போது துதிக்கையை நீட்டிமுகந்து மேலேதூக்கியன்றோ வாய்ப் பெய்யும். இவ்வியற்கையை என்போன்றொரு வெள்ளறிவினன் வருணிப்பின் யாது கூறுவன்? என்னதான் கூறத் தோன்றும்? நம் அறிஞர் திலகர் அதை எவ்வாறலங்கரிக்கின்றார் பாருங்கள்! ஓர் யானை அவ்வருவியைத் தும்பிக்கையால் நிறைய முகந்து மேலே தூக்கி வாய்க்குட் பெய்யக் கருதிற்றாம். அவ்வளவிலே அதற்கோர் நினைவு உதித்ததாம். அஃதாவது "எப்போதும் நீர் எவ்வளவு உயரத்தில் நின்றாலும் கீழ் நோக்கியே செல்லும் இயற்கையது. நெருப்போ இதற்கு மாறாக எவ்வளவு தாழ்த்தினாலும் மேல்நோக்கியே செல் லும் இயல்பிற்று. யான் என் வலியால் இவ்வியற்கையை மாற்ற முடியாதா? ஏதோ பார்ப்போம்" என்று தான்முகந்த அவ்வருவி நீரைக் குடியாமல் தன் தும்பிக்கையை நேருற வானோக்கி நீட்டி

யுயர்த்தி பூ பூ என்று ஊதி ஆகாயத்தில் சிறு திவலைகளாக மேலே எழும்படிச் செய்து களிப்புற்று அத்திவலைகள் கீழே விழுமோ அப்படியே ஆகாயத்திலேயே சென்றுவிடுமோ என்று கவனமாகப் பார்த்துக்கொண்டு நின்றதாம் என்கிறார். ஸ்ரீசைலத்தை கைலையினும் உயர்வுடைத்தாக வர்ணித்துக்காட்ட நினைக்கின்றார். கைலை வெள்ளி மலையாதலின் வெள்ளிய நிறமுடையதா யிருப்பது (அஃதேன் அவ்வாறு வெளுத்தது என்பதற்கு ஓர் (உத்ப்ரேக்ஷை) தற்குறிப்பேற்றம் காட்டப்புகுந்து, அது ஓர்பெரும் மனக்கவலையை யுடையதாகிச் சதா சிந்தனையில் மூழ்கிய காரணத்தால் உடம்பு முழுதும் வெளுத்ததாய் விட்டது. அச்சிந்தனை யாதோவெனில் 'என் போன்று உலகில் எத்தனையோ மலைகளிருப்பவும் அவற்றை எல்லாம்விட்டு இந்த ஸ்ரீசைலம் தன்னை வந்து தரிசித்தவர்கள் அனைவரையும் என்னொரு தலைமேல் ஏற்றிப் பெரும் பாரமாக்குகின்றதே; அது சிறிதும் என்மேற் கருணை கூராது என் கஷ்டங்களை யறியாது அவமதிப்பதாய் இருக்கின்றதே) என்பதேயாம். என்று கைலை ஸ்ரீசைலத்தின்மேல் குறை கூறும் நோக்குடன் சிந்தையுற்று வெளுத்தது என்று நவில்கின்றார். ஸ்ரீசைலத்தைக் கண்ணுற்றோர்கள் கைலையில் இறைவன் திருமுன் அடைவார்களென்றும் அவர்களைச் சுமப்பதற்குச் சலித்தே அம்மலை அவ்வாறு வெளுத்ததென்றும் கூறும் கருத்து சாதாரணப் புலவர் கருத்திற் றட்டுப்படுமோ? அத்தகைய கற்பனுசக்தி தவங் கிடந்தாலும் பிறர்க்கு வருமா? நோக்குமின்.

மற்றும் ஸ்ரீசைலத்திற்கு வந்த பெருமையை நோக்கி மேருமலையின் புத்திரனாகிய மைநாகமலை கடலுள் வீழ்ந்தது. தமக்கோர் அவமானம் நேரிட்டபோது மானமுடையோர் தற்கொலை சூழ்தல் இயல்பன்றோ எனக்கூறி மைநாகங் கடலில் வீழ்ந்ததற்கு ஓர் புதுக் காரணம் கற்பிக்கின்றார். அம் மைநாகம் நினைக்கின்றதாம்: "நானோ மலைகட்கரசனாய மேருவின் அருமைச் செல்வ மகன். அங்ஙனம் இருக்க அடைமொழி சேராத தனிச் சிறப்புப் பெயராகிய சைலம் என்னும் பெயர் எனக்கு வழங்குவதுதான் முறை. அத்தகைய பெருமைப் பெயரை யான்பெறாது இம்மலை (ஸ்ரீசைலம்) தான்கொள்ள யான் காண்பதோ" என்று பொறாமையுற்று, மதிப்பிழந்து வாழ்வதினும் இறத்தலே தக்கதென்று கடைப்பிடித்துக் கடலில் வீழ்ந்தது.

அந்தோ பாவம்! என்றிரங்குகின்றார். சைவம் என்னும் தனிப் பெயர் தனக்குக் கிடைக்காமல் வேறொரு மலைக்கு எய்தியது என்பதை ஓர் உவம முகத்தால் விளக்குகின்றார். தமது உரிமைச் சைவப் பெருமையை வெளியிடும் நோக்குள், ஈசன் என்னும் சொல் எல்லாக் கடவுளரையும் குறியாமல் சிவபிரான் ஒருவரையே சேர்ந்தாற்போல் சைலம் (பருப்பதம்) என்னும் சொல்லும் பொதுவற சிலாதரன் மகவுக்கே (ஸ்ரீசைலத்துக்கே) எய்திற்றன்றோ என மைநாகத்தின் வாக்கில் வைத்துக்கூறிய அவரது அழகுமிக்க கவிச்சுவையை நாவாரக் கற்றுத் துய்ப்போமாக.

இப்புலவர் கோமகன் இயற்றிய சீகாளத்திப் புராணத்தின் சில பாகங்களில் ஓரிடத்தில் பொழில் விளையாட்டுக் கூறும் சமயம் நேர்கின்றது. ஓர் மங்கை மலர் பறிக்கும் ஆசையோடு பூங்கொம்புகளில் தாவுகின்றாள். ஓர் ஆடவன் அவளது கட்கத்தின் அழகைப் பார்க்கும் உட்கிடையோடு பின்தொடர்கின்றான். அக்காட்சி தனக்கு எளிதில் கிட்ட ஓர் சூழ்ச்சிசெய்து அவளோடு நயமாகக் கூறுகின்றான். ஏ! மங்கையே! நீ இக்கொம்பின் உயரவிருக்கும் மலரை எட்டிப் பறிப்பாயோ பார்ப்போம். எங்கே உன் சாமர்த்தியம்! என்று தூண்டி, அவளை உற்சாக மூட்டுகின்றான். அவள், இவன் அத்தனை அக்கறையுடன் கூறுகின்றதற்கென்ன காரணமென்று கருதி உண்மை தெரிந்துகொண்டாள் ஆகையால் அவ்வாறு கையை உயரத் தூக்கி மலர் கொய்வதற்குக் கூசிநிற்கின்றாள்; என விநயமாக ஒரு பொருளைக் கற்பிக்கின்றார், கண்டீரோ! நம் அடிகள் புனையும் அரும்பெறற் கல்வித் திறமையை. (தொடரும்).

வீரசைவ மதமும் வைஷ்ணவ மதமும்.

ஆஸ்தான வித்துவான், சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

முன்மாதத்திய இதழில் வெளிவந்துள்ள 'வீரசைவ மதமும் ஸ்ரீவைஷ்ணவ மதமும்' என்ற தலையங்கமுடைய கட்டுரையின்கண் ஸ்ரீ வைஷ்ணவ மதத் தாபனாசாரியராகும் ஸ்ரீ ராமாநுஜாசாரியரது காலத்தினும் வீரசைவ மதத் தாபனாசாரியராகிய ஸ்ரீபஞ்சாசாரியர்

களுடைய காலம் மிகப் பழமையானது என்றற்குப் பஞ்சபீடங்களி லும் சாகாமடங்களிலும் உள்ள கல்வெட்டு முதலிய சாசனங்களும், சாஸ்திரங்களும் ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய சிறந்த ஆதாரங்களினல் வீரசைவ மதம் வைஷ்ணவ மதத்தினும் காலத்தால் முற்பட்டதெனவே பெரும்பாலான கொள்கையில் ஒத்துக் காணப் படும் இவ்விரண்டு மதசித்தாந்தங்களுள் ஸ்ரீவைஷ்ணவமத சித்தாந்தம் வீரசைவமத சித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டே தோன்றியிருக்க வேண்டுமெனக் கருத இடந்தருகின்றது. ஆனல் உபாசியப் பொரு ளின் (வழிபடு பொருள்) வேறுபாடும் சில புறக்கருமங்களின் வேறு பாடும் காணப்படுகின்றனவே யன்றிச் சிதசித்வைசிஷ்டியம் சகல சுருதி சமன்வயம், சருவஞ்ஞத்துவாதி அனந்த கல்யாணகுண விசிஷ்டம் முதலான எல்லா விஷயங்களில் இரண்டற்கும் பெரும்பாலும் வேறு பாடில்லை. ஏனைய துவித அத்துவித மதங்கட்கும் தம்முள் சிறு பான்மை ஒற்றுமை யுள்ளதெனினும் சீவன், சகத்து ஈசுவரனுக்கிருக் கும் அப்ருதக் சித்தமான வைசிஷ்டியம் இவ்விரண்டு மதங்கட்குக் கொடுத்தாற்போல இதர மதங்கட்குக் கொடுக்கப்படுவதில்லை. சீவப் பிரம்ம ஐக்கியத்தைப் பிரதி பாதிக்கும் அத்வைத சித்தாந்தத்தில் "ஏகமேவ" முதலிய அபேத சுருதிகளுக்கு மாத்திரம் பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மற்றைய பேத சுருதிகளெல்லாம் சமுத் திர கோஷம்போல் பயனற்றனவாகப் போகின்றன. துவித சித்தாந் தத்தில் "த்வாசுபர்ணு" முதலான சீவப்பிரம்மத்தின் பேதத்தைக் கூறும் சுருதிகளுக்கு மாத்திரம் பிரமாணங் கூறப்பட்டு அபேத சுருதி களெல்லாம் பயனற்றனவாக ஒதுக்கப்படுகின்றன. இங்ஙனம் பர மேசுவரனுடைய வாக்காகிய வேதங்களிலேயே ஒருபாகத்தை ஒப்பா திருப்பதினுலும், இங்ஙனம் ஏகதேசத்தில் பிரமாணத்தை அங்கீகரிப் பது வேதத்திற்குப் புறம்பான ஏனைய பௌத்தம் சார்வாக முதலான மதங்களினுங்கூட இருப்பதினுலும், வைதீகத்துவத்திற்கே குறைவு வந்ததன்ரே என்னும் ஆசங்கை எழும். இங்ஙனம் எழும் ஆசங் கைக்கு இடமின்றி வைதீகத்துவத்திற்குப் பூரணத்துவத்தை நிலைநாட் டவே ஸ்ரீவீரசைவ சித்தாந்தத் தாபனசாரியராகிய பகவத் பாதர்கள் விசிஷ்டாத்வைதத்தை நன்ருக உறுதிபெறச் செய்திருக்கின்ருர்கள். இங்ஙனம் பரமாத்மாவி னிடத்தில் சமஸ்தஸ்தூல சூக்ஷும சிதசித் வைசிஷ்டியத்தை அங்கீகரித்து இருப்பதினல் பேத சுருதிகளுக்கும்

அபேத சுருதிகளுக்கும், நிர்குண சுருதிகளுக்கும் சகுண சுருதிகளுக்கும் சமத்துவம் உண்டாகிச் சகல சுருதி சம்மதம் சித்தியாக வைதீகத்துவம் விரோதமின்றி அங்கீகரிக்கப் பெறுகின்றது. இஃதன்றியும் சிருட்டி திதி சம்மாரக் கருத்தாவும், கருணாகரனுமான பரமசிவன் என்ற தந்தையின்பால் தோன்றிய அனந்த சுருதிகளென்னும் கன்னிகைகள் தமக்குள் விரோதமில்லாமல் சகோதர பாவத்துடனிருந்து பரமேஸ்வரனுடைய ஜகத்துத் தாரரூபமான மகா காரியத்தில் உதவி புரிபவரா யிருத்தலே அக்கன்னிகைகளின் கடமையாகின்றது. ஆதலினால் வீரசைவ சித்தாந்தப்படி சகோதர பாவனையிலிருக்கும் சமஸ்த சுருதிகளும் குறைவுபாடில்லாமல் சுருதிகளனைத்திற்கும் ஒரே கருத்தைப் பிரதி பாதித்திருக்கின்ற ஸ்ரீரேணுகாதி பஞ்சாசாரியருடைய சித்தாந்தமானது யாதொரு குறைபாடில்லாததென்று கண்டாகோஷமாகக் கூறப்படுகின்றது.

நமது வீரசைவமதம் ஏனைய மதங்களைக்காட்டிலும் பழமையானதென்றும், காலநிச்சயத்திற்கும் பல ஆதாரங்க ளிருக்கின்றன வென்றும் துணியப்படுகின்றது. அஃதுண்மையே யாயினும் மதங்களுக்குச் சனாதனத்துவம் (பழமை) இருப்பதனால் மாத்திரம் தூய்மையானது என்று கூற முடியாது. இவ்விஷயத்தில் மிகப பழமையானதான சார்வாக மதத்தை எடுத்துக்கொள்வோம். இந்த சார்வாகத மதமானது உலகக் கருத்தாவாகிய ஈசுவரனையும், சுவர்க்க நரகங்களையும், பாவ புண்ணியங்களையும் ஒப்புவதில்லை. மஞ்சள் நீறு முதலிய பொடியின் கூட்டுறவினால் ஓர் அழகான வர்ணம் உண்டாவதுபோல பிருதிவியாதி பூதங்களின் கூட்டுறவினால் சரீரத்தில் ஓர் நவசைதன்னியம் உண்டாகின்றது. அது யாருக்கும் யாதொரு விதமான துன்பத்தையும் கொடுக்கும் என்ற சிந்தனையில்லை. தான்மாத்திரம் சுகமாக இருந்தால் அதுவே சுவர்க்கமென்று சார்வாகரது மதம் பிரதிபாதிக்கின்றது. அதனாலேயே "யதோவா இமானி பூதானி ஜாயந்தெ" முதலான சுருதிப் பிரமாணத்திற் கிணங்க ஈசுவர கர்த்ருத்வ வாதிகளும் வேதமார்க்காவலம்பிகளுமான ஆசாரிய பகவத் பாதர்கள் அப்படிப்பட்ட சார்வாகாதி மதங்களுக்கே நாஸ்திக மதங்களென்று பெயர் கொடுத்து விலக்கியிருக்கின்றனர். ஆதலினால் சார்வாகாதி சனாதன மதங்களாயினும் பவித்திர மதங்களென்று கூறப்படுவதின்று.

எந்த மதத்தில் புண்ணிய பாபங்களின் வேறுபாடும், விதி விலக்கு களும், ஈசுவரக் கர்த்ருத்வமும், சுவர்க்க நரகங்களும், பந்த மோக்ஷங் களும், குரு சிஷ்ய நியாயமும், வருணாச்சிரமங்களின் வேறுபாடும் கூறப்பட் டிருக்கின்றனவோ அந்த மதங்களே தூய்மையான மதம் என்று நமது பாரதீயரது அறநூல்கள் கூறுகின்ற உண்மையாகும். இத்தகைய தூய்மை யுடையவைகளான தருமங்களுமிருந்து பழமை யானதுமானால் பொன்மலர் மணமுடைய தானாற்போல அந்த மதமே சிறந்ததெனப்படும்.

நிகழ்ச்சியில் ஸ்ரீபஞ்சாசாரியரால் பூலோகத்தில் தாபிக்கப் பெற் றுள்ள இந்த வீரசைவ மதமும் யுகந்தோறு மிருந்து வருவதனால் சிறந்த சனாதனத்துவம் (பழமையுடையது) உடையதும், வேதநெறி யைத் தழுவியிருப்பதனால் சிறந்த பவித்திரமுடையதும் ஆகின்றதென் பது வாதமின்றி ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். வீரசைவ மதம் பழமையானதென்பதற்கு இதனாசாரியர்கள் புராணப் பிரசித்தமான காசி முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள ஜோதிலிங்கங்களின் ஆதரிப்பை வகித்து அங்கிருந்த அரசர்களால் பூசிக்கப்பெற்றுத் தாபித்துள்ள பீடங்கள் இப்பொழுதும் காணப்பெறுவதே சான்றாகும்.

இப்படிப்பட்ட பவித்திரமான வீரசைவ மதமானது சிலகால மாக மிகுந்த குறைவுபாட்டிற்கு வந்திருக்கின்றது. மதமென்னும் மகாபுருஷனது சிரத்தின் மீதிருக்கும் குருமார்கள் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள முக்தி சாதனங்களான அஷ்டாவரணங்களின் சொரூ பம் என்னும் வித்தினைக் காலத்தை யனுசரித்து சிஷ்யரது இதய மாகிய நிலத்தின்கண் விதைத்து நல்லறிவாகிய நீரை இறைக்காமல் பிரபஞ்ச வாழ்க்கையிலுள்ள சாமானிய மனிதனைப்போல சுயநலப் பிரியர்களா யிருத்தலினாலும், இதன் மத்தியில் சிறிது சக்தியைப் பெற்றுள்ள சுயேச்சாச்சாரிகள் வேதாகமங்களுக்கே விரோதமான துர்ப்போதனையாகிய விஷ வித்தினை விதைத்து விளைவிக்க வெளிப் பட்டிருப்பதாலும், வேதமார்க்க விரோதிகளாகிய அசம்ஸ்காரிகளா கிய மனிதர்களின் கூட்டுறவு இந்த மதத்தில் புகுந்திருப்பதாலும் இந்த மதமென்னும் மகாபுருஷன் க்ஷயரோக பீடிதனாகித் தனது சுபாவ சித்தமாகிய சௌந்தர்யாதி குணங்களைக் கெடுத்துக்கொண்டு

குருபியென்னுந் தோஷத்திற்கே குறியாயிருக்கின்றான். இதற்குத் தமது சித்தாந்தத்தை அறிந்த பிராசீன ஆசாரிய வமிசத்தவரான குருவே மகாவைத்தியராக இருக்கின்றார். இவர்கள் இதுமுதற்கொண்டாவது தாம் குருத்துவத்தை வகித்திருக்கும் உத்தேசத்தைத் தெரிந்துகொண்டு இனிமேலாயினும் தத்தம் சுற்றத்தாருடைய அபிமானத்தை விடுத்தும் சிஷ்யர்களை மேன்மைக்குக் கொண்டுவருவதே தமது மேன்மையென்னும் மகாசூத்திரத்தை மீண்டும் மேற்கொண்டு தமது சித்தாந்த கிரந்தங்களை அச்சிட்டுப் பரப்புதல் வழியாகப் பிரகாசப்படுத்திச் சிஷ்யரது இதயத்தில் பாப புண்ணியங்களின் விவேகத்தை நிலைநாட்டி அத்தகைய பரிசுத்த நெறியில் சித்தாந்தோபதேசமென்னும் மகாசதத்தை வகித்துச் சமாஜ ஒற்றுமையை விளைவித்து வீரசைவ மதத்தாபகராகிய பஞ்சாசாரியரது வெற்றிக்கொடியைக் கையின்கண் தரித்துக்கொண்டு சிவாதிக்கியமென்னும் சாம்பிராஜ்யத்தை வசப்படுத்தி வீரசைவ சைவசமாஜமாகிய கல்யாணத்தைச் செய்வதே தமது பீஜமந்திர ஜபமென்று பாவித்து உழைப்பதில் வைராக்கிய முடையராதல் வேண்டும். அங்ஙனஞ் செய்யாதிருந்தால் இந்த மதம் எப்பொழுதும் உயர்ந்த நிலையை அடையாதென்று கூறுதல் வேண்டும். (தொடரும்).

தீக்ஷையே மோக்ஷ சாதனம்.

முத்திராலக்ஷணம்.

மந்திரசக்தியை விரும்புகின்றவர்களுக்கு முத்திராலக்ஷணஞானம் முக்கியமானது. இதை யறியாதவர்கட்குத் தாம் ஜபிக்கும் மந்திர சக்தியுண்டாகுவதில்லை. தீக்ஷாகாலத்தில் ஆசாரியரால் உபதேசிக்கப் பெறும் மந்திர ஜபத்தினால் பலனடைய விரும்புகின்றவர்கள் முத்திராலக்ஷணத்தை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமாதலின் வாதுளாகமம் முதலிய மந்திர சாஸ்திரங்களிலிருந்து சுருக்கி இங்கு எழுதப் பெறுகின்றது,

1. ஆவாகன முத்திரை.—இரண்டு கைகளையும் அஞ்சலியாக்குவித்து அநாமிகையின் (மோதிரவிரலின்) மேல்வரைகளில் கட்டைவிரல்களின் நுனியை வைததுச் செய்வது.

2. ஸ்தாபன முத்திரை.—மேற்கண்ட ரீதியாகவே இரண்டு கைகளையும் அதோமுகமாக (கீழ்முகமாக) ஆக்குவது.

3. சன்னிதாபன முத்திரை.—இரண்டு கைகளின் பெருவிரல்களை மேல்முகமாக உயர்த்திநீட்டி, வேறுவேறாக மற்றைய விரல்களை முஷ்டிரூபமாக மடக்கி இரண்டு கைகளையும் சேர்ப்பது.

4. சம்ரோதன முத்திரை.—பெரிய விரல்களை மேலே நீட்டாமல் முஷ்டியினுள்ளே சேர்த்துப் பிடிப்பது.

5. சம்முகீகரண முத்திரை.—அப்படிப்பட்ட முஷ்டிகளை மேல் முகமாக விரித்துப் பிடிப்பது. (புறங்கை கீழ்ப்புறமாகவும் மடக்கிய விரல்களுடன் கூடிய உள்ளங் கைகளை மேல்புறமாகப் பிடிப்பது).

6. அவகுண்டன முத்திரை.—வலக்கையை முஷ்டி வடிவாக்கி அதனைக் கீழ்முகமாக்கித் தர்ஜனியை (சுட்டுவிரலை) நேராகநீட்டி அந்த விரலை இடக்கையின்கண் நாட்டிச் சுற்றித் திருகுவது.

7. வர முத்திரை.—கையை விரித்துச் சாடுவது.

8. அங்குச முத்திரை.—நடுவிரலை நேராக நீட்டி அதன் நடுவரையுடன் சுட்டுவிரலின் நடுவரையைச் சேர்த்து, அந்த நடுவிரலை மாத்திரம் சிறிது மடக்குவது.

9. மகா முத்திரை. இரண்டு கைகளின் பெருவிரல்களை ஒன்றுக்கொன்று பிணைத்துப் பிடித்து மற்றைய விரல்களை யெல்லாம் விடுத்து விரிப்பது.

10. கந்த முத்திரை.—சிறு விரலின் அடியில் பெரு விரலைச் சேர்ப்பது.

11. புஷ்ப முத்திரை.—பெரு விரலின் அடியில் தர்ஜனியைச் (சுட்டுவிரலை) சேர்ப்பது.

12. தூப முத்திரை.—தர்ஜனியின் அடியில் பெரு விரலைச் சேர்ப்பது.

13. தீபமுத்திரை.—நடுவிரலின் அடியில் பெருவிரலை சேர்ப்பது.

14. நமஸ்கார முத்திரை.—இரண்டு கைகளையுஞ் சேர்த்து விரல்களை யெல்லாம் மேல்முகமாக்கி இதயப் பிரதேசத்தில் வைத்துக் கொள்வது.

15. தாள முத்திரை.—கைகளை ஒன்றோடொன்று இதயப் பிர தேசத்தில் தட்டுவது.

16. இலிங்க முத்திரை.—வலக்கையை முஷ்டியாக்கி பெருவிரலை மாத்திரம் மேலேநீட்டி அந்த முஷ்டியை இடக்கையின்கண் சுற்றி வைப்பது.

17. சம்ஹார முத்திரை.—இடக்கையை அதோமுக மாக்கி அதன்கண் வலக்கையை மேல்முகமாக்கி எல்லா விரல்களினாலும் சேர்த்துப் பிடித்துச் சுற்றுவது.

18. பத்ம முத்திரை,—விரல்களை யெல்லாம் நீட்டிப் பெருவிரல் களை மாத்திரம் உள்ளே சேர்த்து இரண்டு முன்கைகளைக் கூட்டுவது.

19. பிரம்ம முத்திரை.—இடக்கையின் மேலே வலக்கையை வைத்து, ஒன்றின் சந்திலே ஒன்றின் விரலைச் சேர்த்துக் கைகளின் பின்பக்கத்தைப் பலமாகப் பிடிப்பது.

20. கூர்ம முத்திரை.—இடக்கையின் மேலே வலக்கையை வைத்து அந்தந்த விரல்களினால் அந்தந்த விரல்களை முறையாகப் பின்னுவது,

21. அஸ்த முத்திரை.—வலக்கையின் அங்குஷ்ட அநாமிகை களைச் சேர்த்து முகத்திலிடுவது,

22. தத்துவ முத்திரை.—வலக்கையின் பெருவிரலையும், தர்ஜனி (சுட்டு) விரலையும் சேர்த்துப் பிடிப்பது. (இதற்கு ஞானமுத்திரை என்றும் பெயர்).

23. குரங்க முத்திரை.—பெருவிரலின் நுனியில் மத்திமை அநா மிகை (நடுவிரல் மோதிரவிரல்)களின் நுனியைச் சேர்த்து, தர்ஜனி, கனிஷ்டிகை (சுட்டுவிரல், சுண்டுவிரல்)களை மேலே நீட்டியிருப்பது;

24. சோடுக முத்திரை.—ஐந்து விரல்களின் நுனியை ஒன்றாகக் கூடியிருப்பது.

இன்னும் அநேக முத்திரைகளின் இலக்கணங்கள் கூறப் பட்டுள்ளன. சாதாரணமாக விதானங்களை நடாத்துவதற்கு வேண் டிய சிலவற்றை மாத்திரம் ஈண்டு காட்டினோம்.

திருமுருகாற்றுப்படை.

க, திருப்பரங்குன்றம்.

(முன் தொடர்ச்சி)

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று.

[சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ் செலவுநீ நயந்தனை யாயின்] இதனை 'புலம்பிரிந் துறையும் சேவடி படரும் நலம்புரி கொள்கைச் செம்மல் உள்ளமொடு செலவுநீ நயந்தனை யாயின்' எனவும், [பலவுட னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப இன்னே பெறுதிநீ முன்னிய வினையே] இதனை, 'நீ முன்னியவினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதி' எனவும் கொண்டு கூட்டுக.

(பதவுரை). புலம்பிரிந்து — மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டு, உறையும் சேவடி — (வீடாகத்) தங்கும் (முருகக் கடவுளது)

திருவடியில், படரும் நலம் – செல்லுதற்குக் காரணமான நல்வினைகளை, புரி – (பல பிறப்புக்களினும்) விரும்பி நிகழ்த்தின. கொள்கை – கோட்பாட்டினாலே, செம்மல் உள்ளமொடு – தலைமையினை யுடைத்தாகிய உள்ளத்தோடே, செலவு – செல்லுஞ் செலவை, நீ நயந்தனையாயின் – நீ விரும்பியே விட்டாயாயின், நீ முன்னிய வினை – நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினையாலே, பலவுடன் – வீடுபெறுவார்க்குரியனவாகக் கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர, நன்னர் நெஞ்சத்து – நன்றாகிய நெஞ்சத்தி னுண்டாகிய, இன்னசை – இனிய வீடுபேற்றை, வாய்ப்ப இன்னே பெறுதி – தப்பாமல் இப்பொழுதே பெறுவை; செருப் புகன்று எடுத்த – போரை வென்று விரும்பிக் கட்டின, சேண் உயர் – சேய்மை நிலத்தே சென்றுயர்ந்த, நெடுங் கொடி – நெடிய கொடிக்கருகே, வரிப்புனை – வரிந்து புனையப்பட்ட, பந்தொடு பாவை தூங்க – பந்தும் பாவையும் (அறுப்பாரின்மையின்) தூங்கியே விடும்படி, பொருநர்த் தேய்த்த – போர் செய்வாரை இல்லாமற் செய்கையினாலே, போர் அரு வாயில் – போர்த்தொழில் அரிதாகிய வாயிலினையும், திருவீற்றிருந்த – திருமகள் வருத்தமின்றி யிருந்த, தீதுதீர் நியமத்து – குற்றந்தீர்ந்த அங்காடித் தெருவினையும், மாடமலி மறுகின் – மாடங்கள் நிறைந்த வனைத் தெருக்களையுமுடைய, கூடல் குடவயின் – மதுரையின் மேற்றிசை யிடத்து, அம் சிறை வண்டின் – அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினது, அரிக்கணம் – அழகினையுடைய திரள், இருஞ்சேற்று அகல் வயல் – கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே, விரிந்து வாய் அவிழ்ந்த – முறுக்கு நெகிழ்ந்து பின்பு தாதும் அகவிதழும் தோன்ற மலர்ந்த, முள்தாள் தாமரை – முள்ளை யுடைத்தாகிய தாளையுடைய தாமரைப் பூவிலே. துஞ்சி – (இராப்பொழுது) துயில்கொண்டு, வைகறை – விடியற்காலத்தே, கள் கமழ் நெய்தல் ஊதி – தேன் நாறுகின்ற நெய்தற் பூவையூதி, எல்பட – ஞாயிறு தோன்றின காலத்தே, கண்போல் மலர்ந்த – கண்ணை ஒக்க விரிந்த, காமர் சுனைமலர் – விருப்பம்ருவின சுனைப்பூக்களிலே சென்று, ஒலிக்கும் குன்று – ஆரவாரிக்குந் திருப்பரங் குன்றிலே, அமர்ந்து உறைதலும் உரியன் – நெஞ்சமர்ந்திருத்தலும் உரியன், அதாஅன்று – அதுவன்றி,

(பொழிப்புரை). மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டு வீடாகத் தங்கும் முருகக் கடவுளது திருவடியில் செல்லுதற்குக்

காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களினும் விரும்பி நிகழ்த்தின கோட் பாட்டினுலே தலைமையினை யுடைத்தாகிய உள்ளத்தோடே செல்லுஞ் செலவை நீ விரும்பிபே விட்டாயாயின், நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக்கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை; போரை வென்று விரும்பிக் கட்டின சேய்மை நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக் கருகே வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மை யின் தூங்கியே விடும்படி போர் செய்வாரை இல்லாமற் செய்கை யினாலே போர்த்தொழில் அரிதாகிய வாயிலினையும், திருமகள் வருத் தம் இன்றியிருந்த குற்றந்தீர்ந்த அக்காடித் தெருவினையும், மாடங் கள் மிக்க ஏனைத் தெருக்களையும் உடைய மதுரையின் மேற்றிசை யிடத்து அழகினை யுடைத்தாகிய சிறகையுடைய வண்டினது அழகினை யுடைய திரள் கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே முறுக்கு நெகிழ்ந்து பின்பு தாதும் அகவிதழும் தோன்ற மலர்ந்த முள்ளை யுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது துயில் கொண்டு விடியற்காலத்தே தேன்நாறும் நெய்தற் பூவையூதி ஞாயிறு தோன்றின காலத்தே கண்ணை யொக்க விரிந்த விருப்ப மருவின சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்குந் திருப்பரங் குன்றிலே நெஞ் சமர்ந்திருத்தலும் உரியன்; அதுவன்றி என்றபடி.

(விரிவுரை). 'புலம்பிரிந் துறையும் சேவடி' யெனக்கொண்டு கூட்டி 'மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டுத் தங்குந் திருவடி' எனப் பொருள் உரைத்து, ஆசிரியர் திருவடியே வீடாயிருக்கு மென் றார்; அது "கேட்டாயோ தோழி கிறி செய்த வாறொருவன், தீட் டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந் துறையான், காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கரு ணைத் தேன்காட்டி, நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த, வாட் டாயங் கொண்டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்" என்னுந் திரு வாசகத்தானும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க என் றார் நச்சினார்க்கினியர்.

'நெடுங் கொடிக் கருகே வரிப்புனை பந்தொடு பாவை தூங்கி' என்றது, பகைவரை மகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற்குத் தூக்கின என்றபடி. இது அக்காலத்திய வழக்கு.

இதனால், 'மெய்ஞ்ஞானத்தால் உண்மை யின்மைகளை யுணர்தலே வீடு, என்பதன்று; ஏனைய பற்றுக்களை விடுத்துப் பற்றற்றானாகிய இறைவனது திருவடியை அடைதலே வீடு என்பதும். ஒருவர்க்கு வீட்டின்கண் விருப்பம் பல பிறப்புக்களிற்செய்த நல்வினைப் பயனாலே உள்ளத் திருந்த உண்டாமென்பதும், அவ்விருப்பம் உண்டாகவே உடற் பற்றும் பிறப்பிடப் பற்றும் சுற்றத்தின் பற்று முதலியனவும் விட்டொழிய வேண்டி முருகப் பெருமானது அற்புதத் திருவிளையாடல்கள் நிகழும் இடங்களையும் அவனடிச் சார்ந்த பெரியாருறையும் இடங்களையுந் தேடிச்சென்று உணர்ந்தா ருணர்த்த அடையவேண்டுமென்பதும், அப்பெருமான் உறையுமிடங்களுள் தெய்வநாயகியாரை மணந்து இந்திரன் முதலியோர்க் கருள்புரிந்த திருப்பரங்குன்றமே முதற்கண்ண தென்பதும், அக்குன்றமும் போரை வென்று தனக்குப் பகைவரின்மைக்கு அறிகுறியாக நெடுங் கொடியை நாட்டி அதனருகே பாவையும் பந்துந் தொங்க விடுத்திருக்கும் வாயிலினையும், செல்வ நிரம்பிய அங்காடித் தெருவினையும், மாடங்கள் நிறைந்த ஏனைய தெருக்களையுமுடைய கூடலாகிய மதுரையின் மேற்றிசையிலுள்ள தென்பதும், அதுவும் 'வண்டின் கூட்டங்கள் இராமுழுதும் தாமரையின்கண் உறங்கி விடியற்காலத்தே நெய்தற்பூவையூதி ஞாயிறு தோன்றியவுடன் மலையின்கணுள்ள சுனைமலர்களில் ஒலிக்கும்' என்றதனால் நீர்வளம் நிலவளமுடைய அக்குன்றிலே அஃறிணைப் பொருளாகிய வண்டினமும் காலத்தேயுறங்கி வைகறையிலெழுந்து ஊதிச் சுனைமலர்த் தேனுடிப் பாடுதலாகிய தம் பணியினை முருகப்பெருமானுவப்பச் செய்யும் பெருமையினை யுடையதென்பதும், அத்தலத்தை யடைந்தால் அப்பெருமான் விரும்பி யமர்ந்திருக்கும் திருக்கோலத்தைக் கண்டின்புறலாமென்பதும் பிறவும் பெற்றாம்.

கணவன் (௬) மார்பினன் (௧௧) சென்னியனாகிய (௪௪) சேயினது (௬௧) சேவடியை யடையும் உள்ளத்தோடு சென்றனையாயின் அப் பெருமான் குன்றமர்ந் துறைதலும் உரியன் (௭௭) என வினைமுடிவு செய்க.

சிவானுபவம்.

ஸ்ரீமத் சச்சிதானந்த அன்னதான சுவாமிகள், (ஆம்பூர் மடாலயம்).

(முன் தொடர்ச்சி,)

யாதினுமுயர்ந்த சிவானுபவத்தைப் பெற விரும்புபவன் எப்பொழுதும் நித்திய அநித்தியப் பொருள்களை விசாரித் தறிதல் வேண்டும். என்றும் அழியாதிருப்பது நித்தியப் பொருள். எக்காலத்திலாயினும் அழியும் பொருள் அநித்தியப் பொருள். இவ்வுலகத்தில் எப்பொழுதும் நிலையாயிருக்கும் பொருள் எது? காலத்திரயத்தில் அழியும் பொருள்கள் எவை? என்னும் விசாரத்தைச் செய்வதே நித்தியா நித்திய விசாரணை. இவ்விசாரத்தைச் செய்யும் ஒருவன் பரமாத்மாவாகிய ஈசுவரனொருவனே சத்தியம்; அதாவது அழிவில்லாத உண்மைப் பொருள், அவனைத் தவிர மற்றைய பொருள்களனைத்தும் அசத்தியம்; அதாவது அழியும் பொருள்கள் என்று விசாரித்தறிதல் வேண்டும். இந்நிலவுலகில் மனிதன் ஈறாகவுள்ள சீவர்கள் எல்லாம் அழியத் தக்கவர்களே. இவையன்றி நித்தியப் பொருள் எனக் கருதப்படும் சூரிய சந்திராதி நவக்கோள்களுக்கும் இறுதிக் காலமுண்டு. எவை நாமரூபங்களை யுடையனவாகக் காணப்படுகின்றனவோ அவையனைத்தும் ஓர்காலத்தில் மாறுதல் அடைவனவாகவும், நசிப்பனவாகவுமே யிருக்கின்றன. இன்று அதியுயரமாயிருக்கும் மலை நாளை ஆழ்ந்ததோர் சமுத்திரமாக மாறினுமாறும். ஆழ்ந்த கடலாயுள்ள ஓரிடம் நாளை உயர்ந்த மலைநாடாயினுமாகும். அதுபோல நம் மானிட வாழ்க்கை பல மாறுதல்கள் ஒன்றன்பின் னொன்றாக நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றன. யாருக்கு நாமரூப பேதபாவனை யுண்டாக வில்லையோ அவருக்குத்தான் சத்தியமான பரமாத்மா ஒருவர் இருக்கின்றார்; நாம் மாத்திரம் மாறுதல் அடைந்துகொண்டே யிருக்கின்றோம் என்னுந் தெளிவு தோன்றும். நாம் எப்பொழுது ஈசன் பாதத்தைச் சிறிது சிறிதாக அணுகுகின்றோமோ அப்பொழுதுதான் இவ்வுலகியல் சம்பந்தமாகப் பதிந்துள்ள மதிப்புச் சிறிது சிறிதாகக் குறைவுபடும். நாம் எவ்விஷயத்தில் மனத்தைச் செலுத்துகின்றோமோ அவ்வழியே நம் அறிவுஞ் சென்று அதனைப்

பிரகாசப்படுத்துகின்றது. நாம் ஈசன்பால் ஆராவன்பு கொள்வோமாயின் இவ்விழி குணங்கள் நம்மை விட்டகல நாம் புனிதர்களாகின்றோம். இங்ஙனம் இந்தவுலக பந்தங்களினின்று விடுபட்டு ஈசன்பால் முழுநோக்கங் கொள்ளுதலே சிவானுபவம் என்று சொல்லப்படுவது. உலகெங்கும் நிறைந்த சைதன்னிய ரூபமான சத்துச்சித்து ஆனந்தமாகிய இலக்கணங்களையுடைய பரசிவப் பிரமத்தையடைய வேண்டி நமது ஆயுள்நாளில் ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக நித்தியா நித்திய வஸ்து விசாரஞ் செய்து கொண்டே யிருக்கவேண்டும். இத்தகைய தரும ஞானங்களைப்பற்றியாவது சிவானுபவத்தைப்பற்றியாவது இவ்வளவு பெரும் முயற்சியெடுத்துக்கொண்டு காலத்தைப் போக்குவானேன்? எனச் சில உலக பந்தமுடையார் கேட்டு ஊக்கக் குறைவை உண்டாக்க முன்வருவர். அவருடைய கேள்விக்குப் பின்னடையாது தக்க விடைகூறிக் கலங்காது நிற்றல் வேண்டும். எங்ஙனமென்னில், பரமேசுவரனது தரிசனமானது உண்மையானது; சத்தியமானது; அது சாமானிய புத்திக்கு எட்டாதது; புலன்களின் வழியாக ஈசனைத் தரிசிக்க முடியாது; பல பிறவிகளிற் செய்த தவப்பயனால் சித்த சுத்தியடைந்து திருவருட் சத்தியால் கைவந்த உண்மை யுணர்ச்சியினால் ஈசுவர தரிசனம் சித்திக்கற்பாலது. அவ்வுணர்ச்சியான ஞானம் அளவற்ற அறநூல்களைக் கற்றதனால் மாத்திரம் கிடைப்பதன்று. அதனாலேயே, "சப்தஜாலம், மஹாரண்ய‌ம், சித்தப்பிரமண காரணம்" எனச் சங்கராசாரியருங் கூறியுள்ளார்.

நாம் நமதாயுள் முழுவதையும் வாத விவாதங்களிலேயே கழிப்போமானால் சித்தத்திற் சலனமுண்டாக நமக்கு ஈசுவர கிருபை கிடைப்பதோ அரிதாகும். ஒருவனது புத்தி பந்தங்களிற் சிக்குண்டால் அதினின்றுந் தப்பி ஈசுவர தரிசனம் பெறுவதோ அரிதினுமரிது. இவ்வுலகில் ஒருவர் தமது பெருமுயற்சியினால் பெருமையும் புகழையும் அடைதற் பொருட்டு உயர்ந்த பதவியைப் பெற்றாலும் பெறலாம். அம்முயற்சியைக்கொண்டு சிவானுபவத்திற் குரியவழியை அடைவதரிது. எந்தப் பொருள் மனதிற்கும் புத்திக்கும் எட்டாமலிருக்கின்றதோ அப்பொருளை புத்தியா லடைவது எப்படி? அந்தக்கரணம் நீங்கின புத்திக்கு அளவிறந்த அரியநூல் ஞானத்தைப்

போதிப்பினும் அது சாத்வீக அனுபவத்தைப் பற்ருது தன் பழய நிலைமையிலேயே நிற்கும். ஆதலாற்ருன், நூலுணர்ச்சியில் மட்டும் காலத்தைக் கழிக்காது சாத்வீக நெறியில் நமது முழுஞானத்தையுஞ் செலுத்தல் வேண்டும். அங்ஙனஞ் செலுத்தாவிடின் முன்னிலும் பன்மடங்காகப் பொய்யான வுடலைப் பேணும் அபிமானம் உடையவர்களாவோம். இப்படிப்பட்ட உடலைப் பேணும் தன்னயங் கருதலாகிய துரபிமானம் எத்துணை நாளாயினும் நம்மைக் கீழ்நிலையில் அழுத்துமேயன்றி மேல்நிலையில் ஏறவிடாது. ஆதலால் நமது அந்தக்கரணம் சாத்வீக நெறியில் ஈடுபட்டதாகவே யிருக்கப் பழகவேண்டும். எங்கு அந்தக்கரணமும் புத்தியும் வேறுபட்டிருக்கின்றனவோ அங்கு புத்தியானது உன்னத நோக்கத்தை விடுத்து உலகவின்பத்தில் தலைப்பட்டு வருந்தாநிற்கும். அப்புத்தி இவ்விழிந்த மார்க்கத்தை விடுத்து அந்தக்கரணத்துடன் ஒருமித்து சாத்மீகநெறியைத் தொடருமாளுல் அடைதற்கரிய பேரின்பத்தை யடையலாம். நமக்கு ஓர் நற்காரியத்தில் விருப்ப முண்டாளுல் அப்பொழுது புத்தியும் அந்தக்கரணமும் ஒருமித்து முயற்சிக்கும். அதில் தன்னலம் உதித்தால் புத்தியானது ஆராய்ச்சி செய்யத் தொடங்கி அந்தக்கரணத்தினின்றும் வேறுபட்டு அவனுக்கேன் கொடுக்கவேண்டும்? அவன் முடவனு? குருடனு? சக்தியில்லாதவனு? தேவையாயின் மெய்வருந்தி சீவிக்கட்டுமே என்று தடுக்கின்றது. அதனுல் முன்னிருந்த அந்தக்கரணச் செயல்குன்றி மறைந்துவிடுகின்றது. ஆதலினுல் சிவானுபவ நேயர்கள் இப்படிப்பட்ட புத்தி விசாரத்தின் வசப்பட்டு மோசம் போகாதிருக்கக் கடவர். (தொடரும்).

ஹரிஹரத்தில் நடைபெறும்
பெருங்கொலை யாகம்,

ஸ்ரீ பஞ்சாசாரியப் பிரபாபத்திராசிரியர்.

ஹரிஹர க்ஷேத்திரத்தின் ஹரிஹரேஸ்வரர் தேவாலயத்தின்கண் சில ஸ்மார்த்தர்கள் ஓர் யாகத்தை ஆரம்பித்து அந்த யாகத்தில் இருபத்தேழு ஆடுகளைப் பலி கொடுப்பதற்குச் சித்தராகி யாகத்திற்கு

ஆரம்பஞ் செய்திருப்பதனை நோக்கினால் எந்த அகிம்சா விரதமுடையவரது இதயம் கொதிப்படையாதிருக்கும்? துன்ப மயமான இந்த வேள்வி என்னும் கூரிய அம்பானது அகிம்சா தீக்ஷையைப் பெற்றிருக்கும் ஜீவகாருணிய சங்கத்தாருடைய செவி வாயிலாகப் புகுந்து அழகான மனமாகிய மலரைத் துளைத்துவிடுவதனால் இந்தப் பயங்கரமானதும் துன்ப மயமானதுமான யாகத்தைத் தடுப்பதற்காகப் பல சுதேச சேவகர்கள் ஹரிஹரத்திற்குச் சென்று தமது தேகத்தியாகமானாலும் கவலையில்லை. இந்தப் பிராணி யிம்சையான இழிதொழிலைத் தடுத்துவிட வேண்டுமென்று சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் என்றும், ஹரிஹர க்ஷேத்திர வாசிகளாகிய பல ஜனங்கள் இந்தத் தூய்மையான தேவாலயத்தின்கண் இந்தக் கொடுஞ் செயலைச் செய்யக் கூடாதென்று தடுத்திருக்கின்றார்கள் என்றும் தெரிய வருகின்ற தன்றியும் விளம்பரப் பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இந்தக் கொடிய யாகத்திற்காக பலவிடங்களிலிருந்து மகாமக பண்டிதர்களும் வந்திருக்கின்றார்களா மன்றோ! இப்பொழுது நமது பாரதநாடே அகிம்சா மயமான சத்தியாக்கிரகம் என்னும் மகாயாகத்தைத் தொடங்கி யிருக்கிறதல்லவா! பரம பவித்திரமும், கடவுள் திருப்தியும், தேச முன்னேற்றமுமாகிய காருண்ணிய யாகத்தில் பங்கேற்றுக்கொள்வதை விடுத்து, உலக விரோதமும், துன்ப மயமானதும், அற்ப பலத்தைக் கொடுப்பதும், அழிவுடையதும், கணப்பொழுதில் ருசிப்பதுமான யாகத்தில் பங்கேற்றுக் கொள்வது பண்டித மக்களுக்கு எத்தகைய பூஷணமாகுமோ? காலநிலைமை யறிந்து உலகத்திற்கெல்லாம் எந்தவினை நன்மையானதென்று காணப்படுகின்றதோ அந்த வினையைச் செய்து புகழடைவதை விடுத்து, சாஸ்திர சம்மதமாயினும் பல ஜனங்களுக்கு விரோதமான காரியத்தைச் செய்வது நீதி விரோதமானதல்லவா?

உலக நன்மையின் பொருட்டுச் சந்தனக் கட்டையைப்போல் தமது தேகத்தைக் குறைத்துக்கொண்டு இருக்கும் மகாத்மா மேற்கொண்டிருக்கும் அகிம்சா மயமான யாகத்தில் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக் கொள்வதில் பின்னடையினும், இதற்கு விரோதமான

இம்சை மயமான யாகத்தைத் தொடங்கி யிருப்பவருடைய புத்தி விசேஷத்தை எவ்வளவு தூரம் கொண்டாடினுலுந் தீராததாகும். மகாத்மா அவர்கள் அகிம்சா மயமான சத்தியாக்கிரகத்தினுல் பாரத மக்களை யெல்லாம் முன்னேற்றமடையச் செய்வதற்காகக் காராக்கிரகம் என்னும் யோகமண்டபத்தில் தக்கலி யென்னும் சுதரிசனத்தைச் சுற்றிக்கொண்டு எப்பொழுதும் தியான சக்தியை யுடையவராகி உட்கார்ந்திருக்கும் சமயத்தில் சுதாரிக்க முடியாதவர்கள் மேற்கண்ட விதமாகச் செய்துகொண்டிருக்கும் துன்ப மயமான யாகத்தைக் கேட்டுத் துக்கத்துடன்கூடி எப்படி உபவாச விரதத்தை அனுட்டிப்பார்களோ சொல்ல முடியாததாகின்றது! "மா ஹிம்சான் ஸ்யாத் ஸர்வா பூதானி" என்னும் வேத வாக்கியத்தைக் கீழே தள்ளித் தகத்தகவென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் அக்கினி குண்டத்தில் ஒன்றல்ல இரண்டல்ல இருபத்தேழு ஆடுகளுக்குப் பலாத்காரமாகக் குத்திக் குத்திக் கொன்று அக்கினி குண்டத்தில் தள்ளி மிகுந்த மாமிச சேஷத்தை இச்சைகொண்டு உண்பாராயின் இன்னும் இயற்கையில் பிராணிவதை செய்கின்ற மாக்களுக்கு இவரால் எவ்வளவு இடங் கொடுத்ததாகின்றது என்பதனை இந்தப் பண்டித பிரமுகர்கள் ஏன் யோசிக்கலாகாது? பொதுவாக பாரத மக்களுக்கே வெறுப்புத் தோன்றக்கூடிய இதன்கண் பரம ஆஸ்திகர் என்றெண்ணிக் கொண்டிருக்கும் இந்த ஸ்மார்த்தர்களிடத்திற் பழகும் சில அறிவுடையவர்கள் இங்கே செயப்படுவதனைப் பார்த்தால் யாருக்குத்தான் ஆச்சரிமுண்டாகாமலிருக்கும்?

இவர்கள் துன்ப மயமான யாகத்தைச் செய்வதிலிருந்து "வர்ஜயேந் மது மாம்ஸம்" என்ற மனுவாக்கியத்தை முன்னர் அறிவித்துக் கொடுந்தொழில் புரிபவரான குரூராத்மாக்களின் மேலே குற்றஞ் சுமத்துகின்ற இவருடைய ஆடம்பரத்திற்கு எள்ளைத் தலையிலிட்டுக் கொண்டாற் போலாயிற்று. இது தன்னிடத்தில் கழுதை யொன்று செத்துக்கிடக்க அதனை அகற்றுமல் மற்றொருவனிடத்தில் இறந்து கிடக்கும் தவளையைக் கண்டு சகியாமல் அதனை யகற்றச் செல்பவன் அறிவுடையவன் என்னும் வாக்கியத்தை அனுசரித்தது ஆகின்றது அல்லவா?

ஒருபக்ஷமான பசுவிசசன பூர்வகமான (ஆட்டின் கொலைசம்பந்தமான யக்ஞங்கள் (யாகங்கள்) சில சாஸ்திரங்களில் கூறப்பட்டிருத்தலால் அப்படிப்பட்ட வாக்கியங்களுக்குத் தமது வித்தியா பலத்தினால் சீவ பசுவென்ற அர்த்தத்திற்கே சங்கோசஞ் செய்து (பாகுபாடு செய்துகொண்டு) அந்தஸ்ஸக்ரு (சத்துருவில்லாத) என்ற பசுவென்று அர்த்தஞ்செய்து அப்படிப்பட்ட பசுக்களை அச்சமின்றி வதைத்து, தேவதாராதனை செய்திருப்பரேல் சர்வசாக்ஷியான பரமேஸ்வரன், தூய்மையனாகி மேலான பதவியைக் கொடுத்தற்குச் சித்தமாயிரான். வைஷ்ணவர் (மாத்துவர்) அந்தப் பசுவிசசன யக்ஞப் பிரகரணத்தில் விதித்திருக்கும் ஆட்டின் கொலைக்கு பிஷ்ட பசுவதை யென்று (மாவினாற் செய்த ஆட்டின் கொலையென்று) பொருளுரைத்து அதன்படி நடந்து உலகத்தாரால் கொண்டாடப்பட்டவராக இருப்பதை இவர்கள் அறியார்களா! அதே வேத சாஸ்திரங்களை அங்கீகரிக்கும் வீரசைவர்கள் "தப: கர்ம ஜபோ த்யானம் ஜ்ஞானம் சேத்யநு பூர்வகம்" என்னும் சாஸ்திர ஞாயத்தினால் பசுகர்மங்களை விடுத்துப் பதிகர்மங்களை ஆசரிக்கவில்லையா? இத்தகைய இன்பகரமான யாகத்தில் மனதைச் செலுத்தாது, யாதொரு விதமான அபராதத்தைச் செய்யாததும், சிங்க முதலிய கொடிய மிருகங்களைப்போல துஷ்ட சுபாவத்தை யடையாததும், கடவுளால் படைக்கப்பட்ட காடுகளிலுள்ள புற்களை மேய்ந்து நதிகளிலுள்ள நீரைக்குடித்து நிலத்திற்கு உரமான எருவையும் பாலையும் கொடுக்கும் சாந்த சுபாவமுள்ளதுமான ஆடுகளை பலாத்காரத்தினால் அக்கினி குண்டத்திற்குத் தரதரவென்று இழுத்துச்சென்று குத்திக்குத்திக் கொல்லப்படுகின்ற ஆடுகளின் ஏழமைத்தனத்தை அகிம்சா வாதிகள் கண்ணாற் கண்டு சும்மாவிருக்கின்றார்களே? ஆதலினால் சுதேச சேவை புரிவோர் இந்தப் பசு யாகத்தில் சத்தியாக்கிரகத்தை வகித்திருப்பது மிகுந்த சிறப்புடையதென இந்த வுலகமே கொண்டாடிக்கொண்டிருக்கின்றது. பட்டிக்காடுகளில் கிராமத்திய ஜனங்கள் தேவித்திருவிழாவில் ஆட்டுக்குட்டிகளைக் கடித்து தேவிக்குப் பலி கொடுக்கின்றார்கள் என்ற நடவடிக்கையைக் கேட்டு சீவகாருணிய சங்கத்தார் மனம் வருந்தி அப்பொழுதே அங்குச் சென்று பலியிடுவோரது கை கால்களையாவது பிடித்துக்கொண்டு ஆட்டின் பலிக்குப் பதிலாகத் தேவியைப் பலகார வன்னங்களினால் திருப்தியடையச் செய்வார்கள் என்றதைக் கேட்

டதன்மேலும் கல்வியறிவில் மிக முன்வந்துள்ள இந்த மனிதர்கள் ஒன்றன் பின்னொன்றாக 27 ஆடுகளை வதைக்கின்ற துக்க வார்த்தையைக் கேட்டு இந்தக் கொடிய தொழிலை சுதேச சேவகர்கள் தடைப்படுத்தாது என்றும் விடார்கள். இந்த யாகவிஷயத்தில் காருணிய கவர்ன்மெண்டாரும் விசாரித்துத் தடுத்துச் சகல தேசாபிமானிகளுக்கும், சகல மதஸ்தர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுப்பார்களென்று நம்புகின்றேன் என்று எழுதியிருக்கின்றார்.

வீரசைவ சித்தாந்த மகாசங்கம்.

சங்காபிமானிகளே !

மணமகனையும் மணமகளையுந் தேர்ந்தெடுத்துச் செய்யும் திருமணமும் பல சுற்றத்தார் முதலியோர்கூட அவர்களுடைய சகாயத்தாற் செய்யப் பெறுவதொரு காரியமாயினும் அதன் பொருளைப் பற்றிய வரவு செலவுப் பொறுப்போ இரண்டொருவரைப் பற்றியதாயிருக்கும். நெருங்கிய சுற்றத்தார் கூடினாலும் போதும். மகாசங்கமாகிய திருமணமோ என்றால், ஒருநாடல்ல சில நாட்டிலுள்ள ஓர் சமூகத்தார் அனைவரும் சமயப் பற்றுடையார் அனைவரும் ஒருங்கே ஓரிடத்தில் ஓர்காலத்தில் கூடுதல் வேண்டும். எல்லோரும் பொருள் உதவி புரிபவராயிருத்தல் வேண்டும். எல்லோரும் ஊக்கங் காட்டிப் பலரும்சேர முயற்சித்தல் வேண்டும். திருமணமோ சிறப்பாக ஒரு குடும்பத்தின் நலத்தைக் கோரிச்செய்யப் பெறுவது. சங்கமோ ஓர் சமூகம் அல்லது சமயத்திலுள்ளார் பலருடைய நன்மையைக் கோரிக் கூடப்பெறுவது. மணவினையிலோ காதலனாகிய தலைவன் காதலிக்கும் அல்லது பெற்றோர்க்கும் மனப் பொருத்தமாயினும் போதும். சங்கத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுபவரோ ஓர் சமூகத்தில் உள்ளார் அனைவர்க்கும் பொருத்தமானவராகவும், சமயாபிமானமும் கல்வியும் நிறைந்தவராகவும், தலைமைவகித்து நடாத்தும் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவராகவும். பதவியும் தோற்றமுமுடையவராகவும் இருத்தல் வேண்டும். இத்துணைத் தகுதியுடையார் நமது சமூகத்தில் கிடைப்பதோ அரிது. கிடைப்பினும் இத்தமிழ் நாட்டில் ஆதரித்து

நடத்துவோர் மிகவும் அரியர். யாரேனும் முற்படின் உதவி செய்வோர் சிலரே. குறை கூறுவோர் பலராயினும் ஆகலாம்.

ஆயினும், பெரியதோர் காரியமென விடுத்தலாகாது. பொறுப் பேற்றுக்கொண்ட சிலராயினும் பெருமுயற்சி யெடுத்துக்கொண்டு சந்தா வசூலித்தல் முதலிய காரியங்களைச் செய்து, ஊக்கங் காட்டு வார்களாயின் வரும் நவம்பர்மாதப் பத்திரிகையிலேயே நிகழ்ச்சிக் குறிப்பு வெளியிடலாம். அப்படி யில்லையானல் ஜனவரிமாத ஆரம் பத்தில் காரியதரிசி முதலியவர்மேல் நடத்தவில்லை யெனக் கூறின் அவர் அதற்கு உரியவராகார்.

ஆதலின் பொறுப்பாளர்களும், வட்டகைக் காரியதரிசிகளும் டிசம்பர்மாத விடுமுறையில் நடத்துவதற்கு வேண்டிய முயற்சியையும் ஆதரவையும் விரைவில் காட்டுவார்களென எதிர் பார்க்கின்றோம்.

த. காரியதரிசி.

வாழ்த்து.

ஆசிரியர் அ. வரதநஞ்சய பிள்ளையவர்கள் நீடுவாழ்க!

ஸ்ரீகாருணீகர் புராணம், துருவசரித்திரம் முதலிய நூல்கள் இயற்றிய நூலாசிரியரும், பண்டைத் தமிழ்ப் பனுவல்களின் உள்ளுரைப் பொருள்களை தெள்ளிதிற் கண்டு, கண்டவாங்கே தமிழ்ப் பேரறிஞர்கள் கேட்டின்புறுமாறு காட்டும் உரையாசிரியரும், தம் உடன்பிறந்தார் முதலிய பற்பல மாணவர்கட்குச் செந்தமிழமுதைக் குழைத்துக் குழைத்தூட்டிய போதகாசிரியரும், தமிழ் நாட்டுள் நிலவும் பற்பல செந்தமிழ் வெளியீடுகட்குச் சீரிய கட்டுரை வழங்கும் பத்திராசிரியரும், நுண்மாண் நுழைபுலம் உடையாரும், சைவமெய்த் திருவேடம் உடையாருமாகிய உயர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கட்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார், தம் 19-வது ஆண்டு விழாவின்கண் தமிழ்க் கவிகள் குழுவின் நாப்பண், ஆசிரியர் என்னும் பொதுப் பெயரை பிள்ளை யவர்கட்கே சிறப்புப் பெயராக்கித் தந்து, இனி "ஆசியர் அ. வரதநஞ்சையபிள்ளை அவர்கள்" என தமிழ்நாட்டாரும்

பிறநாட்டாரும் வழங்கப்பட்டம் வழங்கிய பெருந்தகைமை என்றும் எல்லாராலும் போற்றப்படுவதொன்றும். நமது ஆசிரியர் பிள்ளையவர்களும், "வாழைக் கீழ்க்கன்றென" இன்னும் பற்பல மாணவர்கட்கு தம் தமிழைவழங்கி எங்கும் தமிழ்மணங் கமழுமா செய்து பல்லூழி வாழ இறைவன் திருவடியை வழுத்துகின்றேம்.

பண்டைக் காலத்தில் பொருட் செல்வர்கட்கு 'எட்டிப்பூ' முதலிய பட்டங்களும், கல்விச் செல்வர்கட்கு கணக்காயனர், ஆசிரியர் முதலிய பட்டங்களும் வழங்குதல் வழக்கு. அவ்வழக்கு குன்றி ராய் பகதூர், திவான் பகதூர் எனச் சுழன்றுமாறிக்கொண்டு வரும் இக் காலத்து பண்டைச் செந்தமிழ் வழக்கை நிலைநிறுத்து முகத்தான் இங்ஙனம் பட்டம் வழங்கிய கரந்தை தமிழ்ச் சங்கத்தாரின் மதிநுட்பம் தமிழுலகத்தாரால் போற்றப்படுவ தொன்றே. ஷை சங்கம் என்றும் நின்று நிலவி இன்னும் பற்பல செந்தமிழ் உண்மைப் புலவர்கட்குப் பட்டம் வழங்கி சமயப் பயிரும், சேர்தமிழ்க் கொடியும் தழைக்குமா செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

திரு. அ. வரதநஞ்சையபிள்ளையவர்கட்கு

'ஆசிரியர்' பட்டம் வழங்கியபோது

ஷியார் தம்பியும் மாணவருமாகிய

கும்பகோணம்

காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் கூறியவை.

"பழுத்த செந்தமிழ்ச் சுவையுணர் சிவபிரான் பதத்தில்
அழுத்து சிந்தையை உய்தி யஞ்செழுத்தின்" என்றருளிப்
புழுத்த நாயினுங் கடையனு மெனைப்புகுந் தாண்ட
தழைத்த சீர்வரத நஞ்சையப் பெயர்பெறுந் தகையோய்! (1)

மடையில் வாளைபாய் வயற்கொடி மாடச்செங் குன்றூ
ருடைய நாதனே தொழுகுலம் நால்வர்தீந் தமிழே
யடைய லாஞ்சரண் பொழுதுபோக் கருந்தமிழ்த் திறனே
விடைய வாதனை வெல்வதே வெற்றியென் விரலும். (2)

ஒல்லும் வாயெலாந் தீவழி யோடிய வுள்ளம்
நல்ல வாசெல வான்றவர் பேரவை நண்ண
வல்ல வாசில வுரைத்திடச் செந்நெறி வருவாய்
மெல்ல வாக்கிடப் பெறுதலும் நல்வினை விழைவும். (3)

இன்ன வாம்பல வுறுதியு மெளியனேற் களித்த
முன்ன வா! நினக் கருந்தமிழ்க் குரவனும் முதன்மை
பன்ன வார்தமிழ்க் காந்தையஞ் சவைதரப் படைத்தாய்
மன்ன வூழிநீ வாழிநின் தாள்கள்வா ழியவே. (4)

பத்திரிகை வரவு.

நமது பத்திரிகையின் நிறைவேற்றற் கழகத்து உறுப்பினரும், அரும்பாவூர் நிலக்கிழவருமான திருவாளர் சிவப்பிரகாசய்யரவர்கள் ஆயுட்சந்தா வரவு ரூ. 25–0–0. இவர்கட்கு இறைவன் எல்லா நன்மைகளேயும் அருள்வாராக.

பத்திராசிரியர்.

சங்கத்தின் வரவு.

முசிரி தாலூகா அபினிமங்கலத்தில் சுக்கிலவருடம் தைமாதம் 27-ந்தேதி கோட்டாத்தூர் திருவாளர் அம்பலவாண ஐயரவர்கள் குமாரர் சிரஞ்சீவி சென்ன பசவய்யருக்கும், தாத்தய்யங்கார்பேட்டை திருவாளர் V. கந்தசாமி ஐயரவர்கள் குமாரி சௌபாக்கியவதி குங்கும வல்லி அம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் இருவரும் மகாசங்கத்திற்கு ஒதிவைத்தது ரூ. 2–0–0. இந்த இரண்டும் கீழவட்டகைப் பொறுப்பாளர் திருவாளர் G. இராமலிங்கய்யரவர்கள் மூலம் வரவு. மணமக்களுக்கு இறைவன் இன்னருள் புரிக.

த. காரியதரிசி.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா	ரூ.	25–0–0
ஆண்டுச் சந்தா	,,	2–0–0
மாணவர்கட்கு ஆண்டுச் சந்தா ...	,,	1–8–0
தனிப்பிரதி	,,	0–3–0

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு மாதம் 1-க்கு	ரூ.	5–0–0
,, ½-க்கு ,, ...	,,	3–0–0